**29.10.2024**

**C.C. No. 152/2023**

**ம.சா. 4 விஷ்வநாதன்.**

**(எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**குறுக்கு விசாரணை**

**1) நான் மீனாட்சி பஜாஜ் என்ற நிறுவனத்தில் RTO Section –ல் வேலை செய்கிறேன். எதிரியை எனக்கு 2019 முதல் தெரியும். நான் 2017 முதல் வேலை மேற்படி நிறுவனத்தில் செய்து வருகிறேன். பத்திரத்தில் யார் வரச்சொல்லி கையொப்பம் செய்தேன் என்றால் வீரமணிகண்டன் அவரது வீட்டிற்கு வரசொன்னார். நான் பத்திரத்தில் கையொப்பம் செய்தேன். அப்போது எதிரி வேலையில் இல்லை. நான் பணியில் இருந்த போது எப்படி சாட்சியாக என்னை அழைத்தார் என்றால் எங்கள் நிறுவன நிர்வாக இயக்குனரிடம் மேற்படி வீரமணிகண்டன் பணம் கொடுப்பதாக சொல்லியிருந்தார். அதனால் எங்கள் நிர்வாக இயக்குனர் எங்களை அனுப்பி வைத்தார். நாங்கள் வீட்டிற்கு சென்றபோது ஆவணங்கள் கொடுத்தாரா என்றால் நாங்கள் செல்லும்போது வீட்டில் பத்திரம் எழுதி வைத்திருந்தார். அதில் அவரது அம்மா, அவரது மனைவி ஆகியோர் கையொப்பம் செய்து கைரேகை வைத்னர். பின்னர் வீரமணிகண்டனும் கையொப்பம் செய்தார். மேற்கண்ட பத்திரத்தை எங்களிடம் படித்துகாண்பித்த பின்னர் நானும், என்னுடன் வந்த சுந்தர்ராஜன் இருவரும் கையொப்பம் செய்தோம்.**

**2) அச்சமயத்தில் காசோலை எதுவும் கொடுக்கவில்லையா என்றால் காசோலையை நிறுவனத்தில் கொடுத்திருப்பார். காசோலை பற்றி எந்த விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எங்கள் நிர்வாக இயக்குனருக்காக எதிரியை மிரட்டி மேற்படி பத்திரத்தில் கையொப்பம் பெற்று வந்தோம் என்றால் சரியல்ல. நான் எனது நிறுவனத்திற்காக எதிரிக்கு எதிராக பொய்சாட்சியம் சொல்ல வந்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரி வீட்டிற்கு சென்றபோது பத்திரம் மற்றும்**

**புரோநோட்டும் வாங்கினோமா என்றால் எனக்கு தெரியாது பத்திரத்தில் சாட்சி கையொப்பம் மட்டும் செய்தேன். சுந்தர்ராஜனுக்குதான் தெரியும்.**

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
**விரைவு நீதிபதி காரைக்குடி**